# 25-01-2025 செய்தி

## ஜனவரி 29-இல் விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி - எஃப் 15 ராக்கெட்!

- போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வழிகாட்டி செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி - எஃப் 15 ராக்கெட், ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வரும் 29-ஆம் தேதி விண்ணில் ஏவப்படுகிறது.

- இதற்காக ஐஆர்என்எஸ்எஸ் வரிசையில் 2013 முதல் 2018-ஆம் ஆண்டு வரையான காலகட்டங்களில் 8 வழிகாட்டுதல் செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

- இந்நிலையில், ஐ.ஆர்என்எஸ்எஸ் திட்டத்தில் தற்போதைய அவசியத்துக்கேற்ப மேம்படுத்தப்பட்ட செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்த இஸ்ரோ திட்டமிட்டது.

- தற்போது அதற்கு மாற்றாக அதிநவீன என்விஎஸ் - 02 செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

- என்விஎஸ் - 02 செயற்கைக்கோள் 2,250 கிலோ எடை உடையது. இதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள்.